பிரச்னைகளை அணுகுகிற மாதிரி, எப்படியாவது அவசரச் சட்டம் கொண்டு வருவது; தெரிந்தோ, தெரியாமலோ கொண்டு வருவது; பிறகு அதனை மாற்ற இங்கே மசோதா கொண்டு வருவது; எப்படியாவது அது நிறைவேறும் என்ற நிலை இருக்குமானால், அது அவசரச் சட்டத்தைப் போடுவதற்குக் கொடுத்துள்ள அதிகாரத்தை, இந்தச் சட்ட மன்றத்திற்குள்ள அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்துவதாகும். ஆகவே, இந்த 'பில்'லை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) 1978 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.